# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2022

## வளர்தமிழ் 5

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

# அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. மெய் எழுத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு ____________ .

( தொ, ஈ, ட் )

2. ஒலிம்பிக் போட்டியின் முத்திறநோக்கங்களில் ஒன்று ____________ .

( விரைவு, பணிவு, தாழ்வு )

3. மாணவர்கள் சங்கிலியன் நாடகத்தை நன்றாக ____________ .

( ஆடினர், நடித்தனர், பாடினர் )

4. பாடம் + நேரம் என்பதைச் சேர்த்து எழுதினால் ____________ .

( பாடநேரம், பாடம்நேரம், பாடல்நேரம் )

5. **பழமொழி:**

செய்யுந் ____________ தெய்வம்.

( தொலிலே, தொளிலே, தொழிலே )

6. தொலைவரியைக் கண்டு பிடித்தவர் ____________ .

( கிரகம்பெல், மோர்சு, கலிலியோ )

7. 200 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ____________ .

( இருனூறு. இறுநூறு. இருநூறு)

8. தொலைத்தொடர்பு அற்ற காலத்தில் தூதாகச் சென்ற பறவை

_______________ .

( காகம், புறா, குயில் )

9. பாவேந்தர் பிறந்த இடம் _______________ .

( யாழ்ப்பாணம், நல்லூர், புதுச்சேரி )

10. பொன்னை உருக்கி அணிகலன்களைச் செய்பவர் _______________ .

( குயவர், பொற்கொல்லர், உழவர் )

11. பின்வருவனவற்றுள் கமழ்வுச் சரக்கு _______________ .

( ஏலம், நெல், குரக்கன் )

12. இறக்குமதி என்பதன் எதிர்ச்சொல் _______________ .

( இகழ்ச்சி, ஏற்றுமதி, செய்ம்மதி )

13. தமிழரின் வீரவிளையாட்டுகளில் ஒன்று _______________ .

( வலைப்பந்து, சிலம்பம், கிளித்தட்டு )

14. களப்புகளில் மிகுதியாகக் கிடைக்கும் கடல் உணவு

_______________ .

( இறால், சுறா, கணவாய் )

15. விறகுவெட்டி விறகை வெட்டும்போது ஆற்றில் விழுந்தது

_______________ .

( மண்வெட்டி, வாள், கோடரி )

16. நீண்டதூரம் ஓடிச்சென்று செய்திகளைச் சேர்ப்பித்ததன் நினைவாக உருவாகிய விளையாட்டு ________________ .

( அஞ்சலோட்டம் , உயரம்பாய்தல், கிட்டிப்புள் )

17. புல்லாங்குழலின் இசையைக் ________________ இனிமையாக இருந்தது.

( எண்ணிஎண்ணி, கேட்கக்கேட்க, எடுக்கஎடுக்க )

18. நெசவாளரால் சேலை ________________ .

( வனையப்பட்டது, நெய்யப்பட்டது, விதைக்கப்பட்டது )

19. மான் குய்யிடும். அது போல் யானை ________________ .

( பிளிறும், கத்தும், உறுமும் )

20. "இனி நான் துறவி தமிழே என் துணை" எனச் சூளுரைத்தவர் ________________ .

( செங்குட்டுவன், கணிகன், இளங்கோ )

21. கட்டுக்கரைக்குளம் ________________ உள்ளது.

( மன்னாரில், வவுனியாவில், கிளிநொச்சியில் )

22. தமிழரின் பண்பாட்டில் உயிரைவிட உயர்ந்தது ________________ .

( செல்வம், அறிவு, மானம் )

23. ஆடற்குல ஆண்கள் ________________ என அழைக்கப்பட்டனர்.

( விறலியர், கூத்தர், வேடர் )

24. அவன் நேற்று நடந்த விளையாட்டுப் போட்டியில் ________________ .

( ஓடினான், ஓடுவான், ஓடுகின்றான் )

25. தமிழரின் வெற்றியுடன் தொடர்புடைய பூ ________________ .

( பாலைப்பூ, வாகைப்பூ, முல்லைப்பூ )

26. இசை, நடனம், சிற்பம், ஓவியம், நாடகம் என்பன ________________ .

( இன்கலைகள், இசைக்கருவிகள், முழவுகள் )

27. அருவி மலையிலிருந்து ________________ .

( வீழ்கின்றார், வீழ்கின்றன, வீழ்கின்றது )

28. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல் ________________ .

( இடுக்கண், இன்பம், இடர் )

29. வையகம் என்ற சொல் குறிப்பது ________________ .

( உலகை, மழையை, முகிலை )

30. பொங்கலன்று நீராடிப் புத்தாடை புனைவர். இங்கு புனைவர் என்பது ________________ .

( இடுவர், கட்டுவர், அணிவர் )

புள்ளிகள் 30

**2) அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

1. ஆசிரியர் மாணவனின் ________________ ப் பாராட்டினார்.

( நேர்மை )

2. மன்னார்க் ________________ எண்ணெய் வளம் உள்ளது.

( கடல் )

3. பாரி ________________ த் தேரைக் கொடுத்தான்.

( முல்லை )

4. ________________ பாதிக்கப்பட்ட சிறுவர்கள் உற்றார், உறவினர் இன்றி வாழ்கின்றனர்.

( போர் )

5. மக்கள் இயற்கை ________________ க் கேட்டு மகிழ்வர்.

( ஒலிகள் )

புள்ளிகள் 10

3) **பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. இயற்கை அழகைப் பற்றி, பாவேந்தர் எழுதிய நூல் எது?

_______________________________________________

2. உழவுத்தொழில் எந்நிலத்திற்குரியது?

_______________________________________________

3. நாடுபடு செல்வங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

_______________________________________________

_______________________________________________

4. இராசராசசோழனின் இயற்பெயர் என்ன?

_______________________________________________

5. "தைத்திருநாள் இல்லம் எல்லாம்.." என்ற பாடலில் குறிப்பிடப்படும் விழா எது?

_______________________________________________

6. இளங்கோ அடிகள் எழுதிய மிகச்சிறந்த காப்பியம் எது?

_______________________________________________

7. முத்து வணிகத்துறையில் உலகப் புகழ் பெற்று விளங்கிய இடம் எது?

_______________________________________________

புள்ளிகள் 10

4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி; கவிதையை முழுமையாக்குக.

## ஊக்கம்

| | | |
|---|---|---|
| கட்டிய | சிறுகூடு | கிடைக்கும் |
| முயன்றாலே | மரத்திலே | |

ஒற்றைப் பனைமரம் உயர்ந்த மரம்

உயர்ந்த ____________________ ஒரு கூடு

கற்றை கற்றையாய் இலைச்சருகால்

கட்டிய குருவியின் ____________________

தூக்கணாங்குருவி பனைமரத்தில்

தூக்கிக் ____________________ தனிவீடு

ஊக்கமுடன் நீ ____________________

உனக்கும் ____________________ ஒருவீடு

புள்ளிகள் 10

5) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| புறநானூறு | இனங்கள் | வாழை |
| கறிசமைக்க | தண்டு | |

முக்கனிகளில் வாழைப்பழமும் ஒன்று. வாழை வெப்பம் உள்ள இடங்களில் அதிகமாக வளரும். வாழையில் பல ________________ உள்ளன. வாழையின் நடுப்பகுதியைத் ________________ என்பர். இதைச் சுற்றிப் பல மடல்கள் காணப்படும். வாழைக் காய்கள் ________________ உதவுகின்றன. வாழைப்பூவும் உணவாகப் பயன்படுகிறது. பழந்தமிழ் நூல்களில் ________________ பற்றிய செய்திகள் உள்ளன. தமிழர், முற்றங்களில் வாழை வளர்த்த செய்தியைப் ________________ கூறுகிறது.

புள்ளிகள் 10

6) **பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

பண்டைத்தமிழர் வீர விளையாட்டுகளில் சிறந்து விளங்கினர். ஏறுதழுவுதல், சடுகுடு போன்ற விளையாட்டுகள் தமிழரின் வீரவிளையாட்டுகளாகும். இவ்வீர விளையாட்டுகளுள் இன்றுவரையும் அதிகமாக விளையாடப்படும் விளையாட்டு ஏறுதழுவுதல். ஏறு என்பது காளை மாட்டைக் குறிக்கின்றது. ஏறுதழுவுதல் பொங்கல்விழாவின்போது சிறப்பாக விளையாடப்படுகிறது. இதில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. பண்டைத்தமிழரின் வீர விளையாட்டுகள் பற்றிய செய்திகள் புறநானூற்றில் கூறப்பட்டுள்ளன.

1. வீர விளையாட்டுகளில் சிறந்து விளங்கியவர் யார்?

______________________________

2. தமிழரின் வீர விளையாட்டுகளில் ஒன்றைத் தருக.

______________________________

3. ஏறு என்பது எதைக் குறிக்கின்றது?

______________________________

4. ஏறுதழுவுதல் எவ்விழாவின்போது சிறப்பாக விளையாடப்படுகிறது?

______________________________

______________________________

5. எவை புறநானூற்றில் கூறப்பட்டுள்ளன?

______________________________

புள்ளிகள் 10

**7) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. எமது உடலை உறுதியாக வைத்திருக்க ________________
உதவுகின்றது.
( உடர்பயிற்சி, உடற்பயிற்சி )

2. ஈழத்தின் கீழ்த்திசையில் ________________ அமைந்துள்ளது.
( மட்டக்களப்பு, மட்டக்கலப்பு )

3. தமிழர் தங்கள் ________________ப் போராட வேண்டும்.
( உறிமைக்காக, உரிமைக்காக )

4. உந்துகளிலிருந்து வெளியேறும் புகையினால் ________________
மாசடைகின்றது.
( வளி, வலி )

5. நாம் பனையில் இருந்து பல பயன்களைப் ________________ .
( பெறுகின்றோம் , பெருகின்றோம், )

| புள்ளிகள் 05 |
|---|

8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

- ✵ நானிலத்தில் முல்லை
- ✵ விலங்குகள்
- ✵ நான் வாழும் வீடு
- ✵ பழங்கள்
  - ➢ பழங்களின் பெயர்கள்
  - ➢ அவற்றின் நிறங்களும் சுவையும்
  - ➢ பழங்கள் கிடைக்கும் இடங்கள்
  - ➢ பழங்கள் உண்பதனால் கிடைக்கும் நன்மைகள்

புள்ளிகள் 15